# முன்னணி

சிஎம்யு மார்ச் 5 நடவடிக்கை
விசேட இதழ்
செய்திகள் உள்ளே...

(செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது)

UNIVERSITY OF JAFFNA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

வைகாசி-ஆனி 1987. ரூபா 1/- மலர் 11 இதழ் 2

# மேதினத்தில் இடம்பெற்ற பொலிஸ் வன்முறைக்கு தொழிற் சங்கங்களின் கண்டனம்

புறக கோட்டையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின் பின் ஜனாதிபதி ஜயவர்தன அவசரகாலப் பிரமாணங்களைப் பயன்படுத்தி மே தினப் பகிரங்கப் பொதுக் கூட்டங்களையும் ஊர்வலங்களையும் தடைசெய்தார். அத்துடன் பொலீசாருக்கு அதிகாரங்களையும் வழங்கினர். நாராயென்பிட்டி அபயாராமவில் பொலீசார் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இத்சிரி மெவன் ரணவக்க என்ற பல்கலைக் கழக மாணவரும், சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் தொழிலாளி லெஸ்லி ஆனந்தலால் ஆகியோர் மரணமடைந்தனர். இன்னும் பலர் காயமுற்றனர்.

கொழும்பு யூனியன் பிளேஸ் சமசமாஜக் கட்சி காரியாலயத்தின் முன்னால் மூன்று கட்சிகளின் (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மகாஜனக் கட்சி, சமசமாஜக கட்சி) ஆதரவாளர்கள் கூட்டமாக வந்த பொழுது பொலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்து கூட்டத்தினரைக் கலைத்தனர். அச் சந்தர்ப்பத்தில் சமரமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா காயங்களுக்குள்ளானார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காரியாலயத்தின் முன்னால் பொலீஸ் ட்ரக் வண்டிகள் நிறுத்தப்பட்டு, கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் தொல்லைக்குள்ளாக்கப்பட்டார்கள்.

பொலீஸ் வன் செயலுக்குள்ளான மற்றும் உள்ளாகாத சிஎம்யு உட்பட்ட தொழிற்சங்க அமைப்புக்கள் அபயாராம விகாரையில் பொலீசாரினால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு செய்யப்பட்ட கொலைகளைச் கண்டித்தும் அக்கொலைகள் தொடர்பான பகிரங்க விசாரணையொன்றை நடத்துமாறும் கோரி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளன. அவ்வறிக்கை கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில சாமான்யமான விடயங்கள் தொடர்பாக இணக்கத்திற்கு வரமுடியாது எனக்கூறிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் கட்டுப்பாட்டிலுள்ள தொழிற்சங்க அமைப்புக்கள் இவ்வறிக்கையில் கையெழுத்திட மறுத்துள்ளன.

இவ்வருடத்தில் மேதின நடவடிக்கைகளில் கலந்து கொள்ளக்கூடிய மக்களை பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக எனும் போலியான காரணத்தைக் காட்டி ஜனாதிபதி ஜயவர்தனவினால் அவசரகாலப் பிரமாணங்களின் கீழ் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மேதினத்தன்று பொது ஊர்வலங்க கூட்டங்கள், ஆகியவற்றை நடத்துவது தடை செய்யப்பட்டது. அதே-பிரமாணத்தின் கீழ் ஜனாதிபதி ஜயவர்தனவினால் ஜனாதிபதியின் ஆணைக்குரியவாறு நடப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பொலீ

7ம் பக்கம் பாக்க

## சிஎம்யு நடத்திய மேதினக் கூட்டம்

இவ்வருடம் மேதின ஊர்வலங்களும், கூட்டங்களும் அரசாங்கத்தினால் தடை செய்யப்பட்டிருந்தது எனினும், இதனை பொருட்படுத்தாது, சிஎம்யு தனது பாரப்பரியமான மேதினக் கூட்டத்தை சிஎம்யு மண்டபத்தில் நடத்தியது.

கடந்த வருடங்களைப் போன்று, கொழும்பு கொம்பனித்தெரு நியூன் ஹம் மைதானத்திலிருந்து ஊர்வலமாக வந்து சங்கத்தின் தலைமையகத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென சங்கத்தின் பொதுச் சபை ஏற்கெனவே தீர்மானித்திருந்தது எனினும், சங்கம் அரசாங்கத்தைக் கோரியிருந்தவாறு தடை நீக்கப்படாத காரணத்தினால் 1987 ஏப்ரல் 27ம் திகதி கூடிய சங்கத்தில் பொதுச் சபை கூட்டம் ஒன்றை மட்டும் நடத்துவது தற்போதைய நிலையில் சமயோசிதமானது எனத்தீர்மானித்தது.

மே 1ம் திகதி கொழும்பு நோக்கி வந்த வாகனங்கள் கொழும்பின் நுழைவாயில்களில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், சங்கத்தின் அங்கத்தவர்கள் பலர் பல மைல்கள் நடந்தே வந்து சிஎம்யு மண்டபத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இத்தினத்தில் அதிகாலையிலிருந்தே சிஎம்யு மண்டபம் அமைந்துள்ள கொள்ளுப்பிட்டி 22வது ஒழுங்கையில் ஆயுதம் தாங்கிய பொலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர். சங்கத்தின் தலைமையகம் செங்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் உச்சியில் சிவப்புநிறக் கொடியொன்றும் பறக்கவிடப்பட்டிருந்தது.

(7ம் பக்கம் பார்க்க)




மேதினக் கூட்டத்தில் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் பாலா தம்பு உரை நிகழ்த்துகிறார்.

## கொழும்பில் நிகழ்ந்த குண்டு வெடிப்பு இரக்கமற்ற பயங்கரவாத நடவடிக்கையாகும் – சிஎம்யு அறிக்கை

1987 ஏப்ரல் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5.00 மணியளவில் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையத்தில் மிருகத்தனமான முறையில் ஏற்படுத்தப்பட்ட குண்டு வெடிப்பின் மூலமாக எந்தவிதப் பாவமுமறியாத அப்பாவிகளான மற்றும் பாதுகாப்பற்ற நூற்றுக்கணக்கான மக்களை அவ்விடத்திலேயே மரணமடையச் செய்து அல்லது கடும் காயங்களுக்குள்ளாகச் செய்து இனம் காணப்படாத நபர்களால் செய்யப்பட்ட பயங்கரமான குற்றச் செயலின் விளைவுகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சிஎம்யு வின் நிறைவேற்றுச் சபை 1987 ஏப்ரல் 24ம் திகதி வெள்ளிக்கிழமை கூடியது.

மேற்படி நிறைவேற்றுச் சபைக் கூட்டமானது இப் பயங்கரக் குற்றத்தினை இழைத்தவர்கள் அவர்களது நோக்கம் எதுவாக இருப்பினும். அந்நோக்கத்தையிட்டு செயற்படும் போது ஏனைய மானுடர்களைப்பற்றி எந்தவொரு அக்கறையையும் கொள்ளாத இரக்கமற்ற பயங்கரவாதிகள் எனக் கண்டனம் செய்கின்றது.

துரதிருஷ்ட வசமாக இந்நாட்டு வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் அரசாங்கத்தின் ஆயுதப்படையினருடன் ஆயுதப்போராட்டத்திலீடுபட்டுள்ள தமிழ் பேசுகின்ற சில இளைஞர் குழுக்கள் சிங்கள மக்கள் வாழ்கின்ற சில கிராமங்கள் மற்றும் குடியேற்றங்களில் அப்பாவி மற்றும் பாதுகாப்பற்ற மக்களை பெண்கள் குழந்தைகள்மீது கூட மரணம் விளைவிக்கும் தாக்குதல்களை மேற்கொண்டனர். வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமக்கு மாறான கருத்துக்களைக் கொண்ட வேறு குழுக்களின் அங்கத்தவர்களையும், எதிராளிகளையும் அத்தகைய குழுக்கள் கொன்றன. 1987 ஏப்ரல் 21ம் திகதி மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத அட்டூழியமும், சாதாரண பொதுமக்கள் மீதுமேற்கொள்ளப்பட்ட அட்டூழியமும் எவரால் செய்யப்பட்டிருந்தாலும் இவ்வட்டூழியம் தமிழ் பேசும் குழுக்களில் ஏதாவதொரு குழுவினால் நிகழ்த்தப்பட்டது எனக் கூறப்படுவது ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல.

தபால் தந்தித் தொலைத் தொடர்பு நிலையக்கட்டிடம், சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டட் ஆகிய இடங்களில் நடைபெற்றதைப் போன்று வெடிக்கும் பொருட்களை உப

7ம் பக்கம் பார்க்க

ஜனநாயக மானுட உரிமைகளைப் பாதுகாப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மார்ச் 5 எதிர்ப்பு நடவடிக்கையில் நுவரெலியாவில்

# சி எம் யு உறுப்பினர்கள் பெரும் எழுச்சியுடன் கலந்து கொண்டனர்

1987 மார்ச் 3ம் 4ம் திகதிகளில், நுவரெலியா புரூவரி நிறுவனத்தின் சிஎம்யு உறுப்பினர்கள் முன்னெப்பொழுதும் இல்லாதளவு உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் சிவப்பு நிறப் பாட்ஜ்களை அணிந்தவாறு கடமையாற்றியதைக் காணக் கூடியதாக விருந்தது.

மார்ச் 5ம் திகதி அதாவது சி எம் யு எதிர்ப்பு தினத்தன்று "வோக்கி டோக்கி" கருவிகளைக் கையிலேந்தியவாறு பொலீஸ் படையினர், புரூவரியின் நுழைவாயிலருகில் குழுமியிருந்தனர். இதனைக் கண்ணுற்ற இளம் தொழிலாளர்கள் ஆத்திரமுற்றிருந்ததையும் அவர்கள் வேண்டுமென்றே, சிவப்புச் சின்னங்களுடன் நுழைவாயிலருகில் நடமாடுவதையும் காணக்கூடியதாக விருந்தது.

இச் சந்தர்ப்பத்தில் இராகலை ஜேர்லங்கா சி எம் யு கிளையிலிருந்து, சிவப்பு சேலையணிந்து, சி எம் யு சின்னங்களையும் அணிந்த வண்ணம், ஒரு வான் வண்டி நிறைந்த அங்கத்தவர்கள் ஊர்வலமாகச் செல்லத் தயாராக வந்திறங்கினர். ஆயினும் நுவரெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி 4ம் திகதியன்று நுவரெலியா சி எம் யு பிரதேசக் கமிட்டித் தலைவரிடம் ஊர்வலம் செல்ல அனுமதி இல்லை எனக் கூறியிருந்ததால் அவர்கள் ஏமாற்றமடைந்த நிலையில், நுவரெலியாப் பிரதேசக் கமிட்டிக் காரியாலயம் நோக்கிச் சென்றனர்.

இதற்கிடையில், நுவரெலியா மார்காஸ் தோட்டையிலுள்ள ஜேர்லங்காத் தொழிற்சாலை சி எம் யு உறுப்பினர்களும், இதே போன்று செவ்வுடைதரித்து, செந்நிறச் சின்னங்களை அனிந்தவாறு, அப்பிரதேசமே ஆச்சரியப்படும் அளவிற்கு எழுச்சிக்குரல் எழுப்பியவாறு, மார்காஸ் தோட்டையிலிருந்து நுவரெலியா பிரதேசக் காரியாலயம் வரை சுமார் நான்கு மைல்கள் நடையாகவே வந்ததையும் காணக்கூடியதாக விருந்தது.

நுவரெலியா சென் அன்டுரூஸ் ஓட்டல் கிளையைச் சேர்ந்த 21 அங்கத்தவர்கள், தமது நிர்வாகத்தினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களையும் அலட்சியம் செய்து காலை 10.30 க்கு வேலை நிறுத்தம் செய்தபின் சிவப்பு நிறச் சின்னங்களை அணிந்து கொண்டு, பி. ப. 2.00 மணிக்குத் தமது ஓட்டல் வளவினுள் கூட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தயாராக விருந்தனர். தலவாக்கலை வோக்கர்ஸ் கிளையுறுப்பினர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதாக அறிவித்துள்ளனர்.

மார்ச் 5ம் திகதி காலை 10.00 மணிக்கு நுவரெலியா புரூவரிக்கிளை நிறுவனத்தின் உள்ளே கூட்டமொன்றை நடத்தியதுடன், ஜேர்லங்கா இராகலை, மார்காஸ் தோட்டைக்கிளைகள், மற்றும் செனட் அன்ரூஸ் ஆகிய கிளைகளின் உறுப்பினர்கள் நுவரெலியாப் பிரதேசக் கமிட்டிக் காரியாலயத்தில் கூட்டமொன்றை நடத்தினர்.


நுவரெலியா, கிரண்ட் ஹோட்டல் கிளையும் தமது ஹோட்டல் கிளைவளவுக்குள் பிற்பகல் 2.00 மணிக்குக் கூட்டமொன்றை நடத்தியது.

சிவப்புப் பாட்ஜ்களை அணிந்த எமது அங்கத்தவர்கள் நுவரெலியா நகர் வாசிகள் மத்தியில் புதிய ஒரு கண்ணோட்டத்தையும், உணர்வையும் ஏற்படுத்தினர் எனக் கூறினால் மிகையாகாது. அரசாங்க ஊழியர்கள் மத்தியில் கூட, எச்சரிக்கையடைய வேண்டும் எனும் எண்ணத்தையும், அவர்கள் மத்தியிலான போராட்ட சுபாவம் மழுங்கடிக்கப்பட்டுள்ளதையிட்டு வெட்க உணர்வையும் ஏற்படுத்துவதற்கு நுவரெலியாப் பிரதேசக் கமிட்டி காரியாலயத்தில் கூடிய அங்கத்தவர்களால் முடிந்துள்ளது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். சி எம் யு வின் மார்ச் 5ம் திகதி நடவடிக்கையானது நுவரெலியா வாழ் உழைக்கும் மக்கள், விவசாயிகள் மத்தியில் அவர்களின் கண்களைத் திறந்து விடுவதற்குரிய ஒரு நடவடிக்கையாக அமைந்தது.

மேற்படி எதிர்ப்பு தினத்தில் நடைபெற்ற கூட்டங்களின்போது, நாட்டில் அமு

(8ம் பக்கம் பார்க்க)

## உண்மை ஏன் கசக்கின்றது ?



நாம் காண்பவற்றைக் கூறுவோம். எமது கருத்துக்களை திடமாகவும் நம்பிக்கையுடனும் வெளியிடுவோம். உண்மைகள் கசப்பானவையாகவிருப்பினும் அவற்றைக் கூறுகின்ற கொள்கையை அன்றும், இன்றும் பின்பற்றி வந்துள்ளதைப் போன்று நாளையும் பின்பற்றுவோம்.

நாம் செய்கின்ற கூறுகின்றவற்றைக் கண்டு சிலர் அச்சம் கொள்கின்றனர். சிலர் அதிர்ச்சியடைகின்றனர். சிலர் செய்யவேண்டியவை தொடர்பாக எம்மைக் குருவாக மதித்து வழிகாட்டலைக் கோருகின்றனர். எது எவ்வாறெனினும் எமது தீர்மானங்கள் எமது அரசியல், மற்றும் நாம் ஏற்றுக் கொள்ளும் சித்தாந்தம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. நாம் கூறுகின்ற செய்கின்றவை தொடர்பான விமர்சனங்களையும் தாக்குதல்களையும் கண்டு நாம் ஒரு போதும் அதிர்ச்சியடைவதில்லை. முழு உலகுமே சரியானது என்று ஏற்றுக்கொண்ட ஒன்று பிழையானது என எமக்குப் படுமாயின் அது பிழையானது எனக் கூறுவதற்கு நாம் பின்னிற்கப் போவதில்லை.

தற்போதைய நிலைமை தொடர்பாக, மேற்கூறப்பட்ட சித்தாந்தத்தினை அடிப்படையாகக் கொண்ட கண்ணோட்டத்துடனேயே நாம் பேசவேண்டியுள்ளது. இலங்கையில் தற்போதுள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்களினால் மேற் கொள்ளப்படும் பிரச்சார வெள்ளத்தில் நாமும் மூழ்கி அதனை மேலும் முன்னெடுத்துச் சென்று முட்டாள்தனத்தின் எல்லைக்கே மக்களை இட்டுச் செல்லவேண்டிய அவசியம் எமக்கில்லை. பத்திரிகைக் கலையைப் பொறுத்த வரையில் அதுபற்றி சிலர் அதிருப்தி கொண்டு கசப்புணர்வுடன் உள்ளனர். சில சந்தர்ப்பங்களில் நாம் கொண்டுள்ள கருத்துக்கள் காரணமாக எமது அவதானம் சில விடயங்களின் மீது அளவுக்கு அதிகமாகச் செலுத்தப்படலாம். எனினும், இது மூட நம்பிக்கையிலாழ்ந்து வெளியேறவியலாதுள்ளவர்களை வெளிக்கொணர்வதற்கு சிறிதளவேனும் உதவக் கூடும். எமது முயற்சிகளின் போது எமக்கு மலர் மாலையோ பதக்கங்களோ கிடைக்கப் போவதில்லை என்பதை நாம் அறிவோம்.

சில விடயங்கள் தொடர்பான எமது கொள்கைகள், நாம் கொண்ட நிலைப்பாடுகள் ஆகியவற்றைக் கண்டித்து, எம்மீது தாக்குதல்களைத் தொடுத்தாலும் கூட, கால ஓட்டங்கள் கடந்துவருகின்றபோது, சில காலத்தின்பின் எம்மால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடு சரியானதே என ஏற்றுக்கொண்ட பலசந்தர்ப்பங்கள் உள்ளன என்பதால் நாம் எப்பொழுதும் சரியான நிலைப்பாடுகளை எடுக்கின்றோம் என்பதை நாம் அறிவோம். அதனால் நாம்முன்னேக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம். எம்முடைய பாதையில் நாம் சிறிதும் பிறளாது பயணம் செய்கின்றோம். குற்றம் சாட்டுதல்கள், தாக்குதல்கள் எம்மை மென்மேலும் தைரியப்படுத்துகின்றன. அவை எமக்கு மலர் மாலைகளாகத் தோன்றுகின்றன.

எமது நோக்கங்கள், பொய்கள் புரட்டுக்கள் அநீதிகள் ஆகியவற்றினால் தாக்கப்பட்டுள்ளவர்களுக்கு விளக்கமளித்து உண்மை, யதார்த்தம் நியாயம் இவைகள் தான் என்பதை பறைசாற்றுகின்றவைகளாக அமைந்துள்ளன. அந்த நோக்கங்களையிட்டு நாம் முன்னேறிச் செல்வோம்.

## நெசவு ஆடையுற்பத்தி நிறுவனங்களில் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுகின்றார்கள்

ஆடை மற்றும் நெசவுத் தொழிற்சாலைகளில் கடமையாற்றும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இன்று முற்று முழுதாக அடிமைகளாகவே நடத்தப்படுகின்றார்கள். சில வேலைகளில் 24 மணித்தியாலங்கள் கூட இவர்கள் வேலை வாங்கப்படுகின்றார்கள். தலை நகரில் ஆடையுற்பத்தித் தொழிற் சாலையொன்றில் வேலை செய்யும் ஒரு பெண் தொழிலாளியும், கொழும்பு கொள்ளுப்பிட்டியில் ஒரு சிறுவருக்கான ஆடையுற்பத்தி செய்யும் நிலையத்தில் வேலை செய்யும் ஒரு பெண் ஊழியரும் தத்தமது நிலைபற்றிக் குறிப்பிட்டதைக் கீழே தருகின்றோம்.

"எனது முதலாளி எனக்கு மட்டுமே தண்டனை வழங்கினார். ஆனால் அதைக் கணக்கில் கொள்ளாமல் நான் வேலை செய்கின்றேன் நான் முன்பு பெக்கிங் பகுதியில் கடமையாற்றினேன் தற்போது என்னை டிரையிங் பகுதிக்கு மாற்றியுள்ளார்கள். வேகவைத்து, கழுவப்பட்டு அனுப்பப்படும் துணியை காயவைப்பது இந்தப்பகுதியிலேயேயாகும். அப்படி துணியை அடுக்கும் போது கைகள் சுடுகின்றன. வியர்வை ஆறாக வழியும். என்ன செய்வது. நான் வேலை செய்யும் இயந்திரம் ஆபீஸின் முன்னால் அமைந்துள்ளது. எமது பொஸ் ஆபீஸிற்கு வந்தவுடன் தனது ஆசனத்தில் அமர்ந்து என்னை அவதானித்துக் கொண்டிருப்பார். அப்படியான சந்தர்ப்பங்களில் நான் மிகவும் மகிழ்ச்சியாக வேலை செய்வதைப் போல் காட்டிக் கொள்வேன், எந்தவிதக் கவலையையும் காட்டுவது இல்லை.

சில சந்தர்ப்பங்களில் என்னைப் பற்றி எனக்கே கவலையாக இருக்கும் அவர்கள் சிலவேளை எனக்கு வேறு போக்கிடம் இல்லை எனக்கருதுவதாக விருக்கும் ஆனால் நான் விலகாமலிருப்பது அவர்கள்மீதுள்ள ஆத்திரத்தினாலேயேயாகும். இல்லையெனில் இப்போதென்றாலும் என்னால் விலகவியலும் எனக்கு இரண்டு மூன்று இடங்களில் வேலை கிடைத்தது. ஆனால் தற்போதைக்குப் போகப் போவதில்லை. எனக்கு இங்கே மேலதிக நேரவேலை வழங்கப்படுபதில்லை. முன்பு மேலதிக நேர வேலை செய்து மாதம் 700/- வரை சம்பளம் பெற்றேன் ஆனால் தற்போது ரூ 500/- வரை மட்டுமே கிடைக்கின்றது. நான் எனது ஏனைய தோழியரைப்பற்றிக் கவலைப்படுகின்றேன். அவர்கள் என்ன கூறினாலும் செய்யத்தயாரான நிலையில் இருக்கின்றார்கள். வெட்கம் என்பது சிறிதும் இல்லை. மேலதிக நேரவேலையை கேட்டுப் பெற்றுக் செய்கின்றார்கள். அண்மையில் நிலுவைப் பணம் என்று கொடுத்தார்கள். தொழிற் சங்கத்தில் இல்லாதவர்களுக்கு மட்டுமே கொடுத்தார்கள். நாம் அதுபற்றி கேட்டபோது, எமக்கு முன்பிருந்தே அவர்கள் வேலை செய்வதால் நிலுவை வழங்கப்பட்டது எனக் கூறுகிறார்கள்.

நாம் சங்கத்தில் சேர்ந்த பின்தான் எமது சப்பளம் கூடியது. முன்பு 18/- ரூபாய் தான் சம்பளம் கிடைத்தது. ஆனால் சங்கத்தில் சேர்ந்தவுடன் ரூ 26/- வழங்கப்பட்டது. அதேநேரத்தில், சங்கத்திற்கு எதிராக வேலை செய்த ஆண்களுக்கு அதிக சம்பளம் வழங்குகிறார்கள். எமது இனத்தைச் சேர்ந்தவர்கள் இப்படித்தான் செய்கின்றார்கள். தாமே தமது குழியைப்பறித்துக் கொள்கின்றார்கள். நாம் எப்போதும் எமக்குப் பிறகு வேலைக்கு வருகின்றவர்களைப் பற்றிச் சிந்திக்கின்றோம். ஆனால் அந்த ஆண் தொழிலாளர்கள் அப்படி சிந்திப்பதாகத் தெரியவில்லை. எம்மால் என்னதான் செய்யமுடியும்."

கொள்ளுப்பிட்டியிலுள்ள ஆடையுற்பத்தி செய்து விற்கும் நிறுவனமொன்றில் கடமையாற்றும் ஒரு இளம் பெண் இவ்வாறு கூறுகின்றார். "நான் இங்கு 4 வருடங்களாக வேலை செய்கின்றேன். ஆனால் இன்னும் எனது சேலாபநிதி கழிக்கப்படவில்லை. லீவு இல்லை. இங்கு வேலை செய்யும் பெரும்பான்மையோருக்கு லீவு இல்லை. வேலைக்கு வராவிட்டால் சம்பளம் வெட்டுகின்றார்கள். இந்த கடையில் வேலை செய்வதால், இங்கு எவ்வளவு விற்பனை நடைபெறுகின்றது என்பதை நாம் அறிவோம். சிறுபிள்ளைகளின் ஆடைகள் ரூபாய் 200/- லிருந்து 700/- வரை விற்கப்படுகின்றன. பண்டிகை நாட்களில் இங்கு பெரும் விற்பனை நடைபெறும். கோடிக் கணக்கில் இலாபம் கிடைக்கின்றது. எமது சம்பளம் என்றால் மிகக் குறைவு 18 வருடங்களாக வேலை செய்த ஒரு தோழி அண்மையில் விலகினார் வேறு எந்தவிதக் கொடுப்பனவும் இன்றி அவருக்கு தினத்திற்கு ரூபாய் 40/- மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. போயா தினம், சனி, ஞாயிறு பண்டிகை விடுமுறை என்று எமக்கு லீவு கிடையாது. தொடர்ந்தும் வேலை செய்யவேண்டும். அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ரூபாய் 100/-சம்பள உயர்வு எமக்கு வழங்கப்படவில்லை. வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகளும் இங்கு வந்து பொருட்களை வாங்கிச் செல்கின்றார்கள். இதனால் சில தினங்களில் ரூபாய் 10,000 வரை விற்பனை நடைபெறுகின்றது. ஆனால், ஊழியர்களோ அடிமைகள் போல் நடத்தப்படுகின்றார்கள். எவ்வளவு நல்ல அரசாங்கங்கள் வந்தாலும், போனாலும், தொழிற் சாலைகளில் வேலை செய்யும், அதேபோன்று கடைகளில் வேலை செய்யும் எங்களைப் போன்றவர்களுக்கென்றால் விடிவேயில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிஎம்யு மார்ச் 5 நடவடிக்கைக்கு தேசிய, சர்வதேச அமைப்புக்களின் வாழ்த்துக்கள்

சிஎம்யு மார்ச் 5ம் திகதி நடவடிக்கைக்கு சர்வதேச அமைப்புக்களினுல் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்திகளையும், ஜனுதிபதிக்கும் பிரதமர் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கும் அனுப்பிய தந்திச் செய்திகள் கடிதங்கள் ஆகியவற்றையும் கீழே பிரசுரிக்கின்றோம். வாழ்த்துக்களை அனுப்பிய உள்நாட்டு அமைப்புக்களின் பெயர்கள் கீழ்கண்டவருகும்.

ஐக்கிய தொழிற் சங்க சம்மேளனம். இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம். மக்கள் ஐக்கிய முன்னணி. ஐக்கிய பொது அரசாங்கதாதிமார் சங்கம், ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற் சங்கம். இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் இலங்கை வங்கியூழியர் சங்கம் இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம். இலங்கைப் பயிர்ச் செய்கை சேவையாளர் சங்கம். சுயாதீன மாணவர் சங்கம். கொழும்பு பல்கலைக்கழகம்.

கீழ்க்காணும் சர்வதேச அமைப்புக்களும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தன சர்வதேச உணவு மற்றும் அதனேடிணைந்த தொழில்களின் தொழிற் சங்கம் (ஐ.யு.எப்) சங்கத்தினுல் ஜனுதிபதிக்கும், பாதுகாப்பு அமைச்சர் லலித்அத்துலத்முதலிக்கும் அனுப்பியிருந்த தந்திச் செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தது''

''மானுட உரிமைகள் மற்றும் ஜனநாயகம் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் அவைகள் உலகெங்கனும் தொழிற்சங்க இயக்கத்தின் ஆணிவேராகும் அவை நீதி சமாதானம் சௌஜன்யம் ஆகிய வற்றிற்கான அடிப்படையுமாகும்

எனவே, இலங்கையில் மானுட ஜனநாயக உரிமைகள் மற்றும் நீதி, சமாதானத்திற்காக நடத்தப்படும் போராட்டத்தில் 1987 மார்ச் 5ம் திகதி நடைபெறும் சிஎம்யு அமைப்பின் எதிர்ப்பு நடவடிக்கைக்கு நாம் பூரண ஆதரவினைத் தெரிவிக்கின்றோம்.

இந்த சிஎம்யு எதிர்ப்பு நடவடிக்கைக்கு இடைஞ்சல் செய்வதற்கோ தடை செய்வதற்கென்ருலும் எந்த வித காரணமும் இருப்பதாக எம்மால் விளங்க முடியவில்லை. சங்கங்களின் பொது ஊர்வலம் செல்லும் மற்றும் வேலை நிறுத்தம் செய்யும் உரிமைகள் ஜனநாயக சட்ட நீதியான உரிமைகளுள் சிலவாகும்.

நாம் எமது சிஎம்யு தோழர் தோழியருக்கு பூரண ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவதுடன் 16 வருடகால அவசரகால நிலைமையின் பின் மீண்டும் ஜனநாயக மான இலங்கையொன்றிற்காகவும் மானுட உரிமைகளை நிலை நாட்டுமாறும் சிஎம்யு அமைப்புடன் கூட்டானவாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

(சர்வதேச போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தின் செய்தி கடந்த முன்னணி இதழில் பிரசுரிக்கப்பட்டிருந்தது.) சர்வதேச நெசவு மற்றும் தோற் பொருள் உற்பத்தி தொழிலாளர் சம்மேளனம் தனது தோழமையான ஆதரவுகளை தெரிவித்திருந்தது.

நெசவுத் தொழிலாளர்களின் ஆசியப்பிராந்திய அமைப்பினுல் ஜனுதிபதிக்கு அனுப்பப்பட்ட தந்தியில் கீழ்க் கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

''ஆசியாவில் இருபத்தியிரண்டு இலட்சம் அங்கத்தவர்களை பிரதிநிதித்துவம் செய்யும் துணி மற்றும் ஆடையுற்பத்தித் தொழிலாளர்களின் ஆசியப்பிராந்திய அமைப்பு (டுவாரோ) இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம் சி எம் யு வினுல் முன்வைக்கப்பட்டுள்ள மானுட உரிமைகள் மற்றும் நீதி தொடர்பான கோரிக்கைக்கு தனது பூரணமான தோழமையுடனுன ஆதரவைத் தெரிவிக்கின்றது. அச் சங்கத்தின் நிலைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு மானுட உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளக் கூடிய வாருன நியாயமான அளவுக்கு அதனை ஏற்படுத்துமாறு இலங்கையின் ஜனுதிபதியிடம் வேண்டுகிறோம். (சர்வதேச உணவு மற்றும் அதனேடிணைந்த தொழில்களின் ஆசிய பசுபிக்பிராந்திய அமைப்பினுல் அனுப்பப்பட்ட செய்தி கடந்த முன்னணி இதழில் பிரசுரிக்கப்பட்டது.)

**இந்தியா**

அகில இந்தியத் துறைமுக டொக் தொழிலாளர் சங்கமும் (சுமார் 50,000 உறுப்பினர்களைக் கொண்டது) கல்கத்தா துறைமுகக் கிராமிய சங்கம் ஆகியனவும் தமது ஒத்துழைப்பையும், ஆதரவினையும் தெரிவித்திருந்தன.

**ஜப்பான்**

ஜப்பான் தொழிற்சங்கங்களின் பொதுச் சபை (சொஹியோ) ஜப்பானிலேயே பெரிதான இத் தொழிற்சங்கம் சுமார் 5 இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்டது.

யப்பானில் ஐ. யு எப்பில் இணைந்துள்ள அமைப்பைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஜே.சி.சி அமைப்பும் செய்திகளை அனுப்பியுள்ளது.

செய்திகளை அனுப்பியுள்ள ஏனைய சர்வதேச அமைப்புக்கள் கீழ்க்கண்டவாருகும்.

**சுவீடன்**

சுவீடன் உணவுக் தொழிலாளர் சங்கம். இச் சங்கம் சுவீடன் சோசலிஸ ஜனநாயக அரசாங்கத்துடன் தொடர்புடையது என்பதுடன் ஜனுதிபதி ஜயர்வர்தன மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் பிரதிகளை சுவீடன் பிரதமர் இங்கர்வல் கார்ல்ஸ்ன்டா மற்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஸ்டென் அண்டர்சன், வெளிநாட்டுதவி அமைச்சர் ஜோர்ஜ் அண்டர்சன் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளதாக எமக்கு அறிவித்துள்ளது.

**அவுஸ்திரேலியா**

அவுஸ்திரேலிய கூட்டு மதுபானம் மற்றும் ஒத்த தொழிலாளர் சங்கம் அவுஸ்திரேலிய கூட்டு களஞ்சிய மற்றும் பொட்டணம் கட்டுபவர்களின் சங்கம் அவுஸ்திரேலிய உற்பத்தி விற்பனையாளர் சங்கம்.

**மலேசியா**

ஹோட்டல் மதுபானச் சாலை மற்றும் சிற்றுண்டிச் சாலை ஊழியர்களின் சர்வதேச சங்கம்.

**மொரீசியஸ் தீவு**

மொரீசியஸ் கலைஞர்களின் பொது தொழிலாளர் சங்கம்.

**பின்லாந்து**

பின்லாந்து ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர் சங்கம்

**ஸ்கண்டிநேவிய நாடுகள்**

(ரோர்டீன் நாடுகள்)

ரோர்டீன் நாடுகள் ஐந்தில் சுமார் 130,000 தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஹோட்டல் கபே மற்றும் சிற்றுண்டிச் சாலை ஊழியர்களின் ரோர்டீன் சங்கம்

**அமெரிக்கா**

அமெரிக்க ட்ரக் மற்றும் ஒட்டுநர்களின் பீம்ஸ்டர்ஸ் வாடகை வண்டி ஒட்டுநர்களின், களஞ்சிய ஊழியர்களின் சர்வதேச சகோதர அமைப்பு (2.000,000 உறுப்பினர்கள்)

**நியூஸிலாந்து**

நியூஸிலாந்து தொழிலாளர் சங்கம் நியூஸிலாந்து ஒத்த மதுபான தொழிற்நுட்ப ஊழியர்களின் சங்கம்.

நோர்வே ஹோட்டல் மற்றும் சிற்றுண்டிச்சாலை ஊழியர்களின் சங்கம்

**பிரிட்டன்**

விஞ்ஞான, தொழில்நுட்ப, முகாமைத்துவ ஊழியர் சங்கம்.

**நெதர்லாந்து**

உணவு மற்றும் குடிவகை ஊழியர் சங்கம் (ஐயுஎப் இணைப்பு)

**பாக்கிஸ்தான்**

சர்வதேச தொழிலாளர்களின், ஊழியர்களின் சங்கம்.

**கௌதமாலா**

உணவு மற்றும் அதோடிணைந்த ஊழியர்களின் இணைப்புச் சங்கம் (ஐ.யு.எப் இணைப்பு)

**நெதர்லாந்து**

உணவு மற்றும் அதோடிணைந்த சேவைகளின் இணைப்புச் சங்கம்.

**ஹயிட்டி தீவுகள்**

ஐ.யு.எப் இணைப்பு ஹோட்டல் ஊழியர் சங்கம்

**சிலீ**

ஐ.யு.எப் இணைப்புச் சங்கம்

**பிலிப்பீன்ஸ்**

ஐ.யு.எப். கப்பற்ருெழிலாளர்களின் ஆசியப் பிராந்தியக் கமிட்டியினுல் எடுக்கப்பட்ட தீர்மானம் கடந்த முன்னணியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**மேற்கு ஜெர்மனி**

உணவு மற்றும் ஹோட்டல் ஊழியர் சங்கம் (இணைப்புச் சங்கம்)

**ஹொங் கொங்**

ஆசியா லேபர் மொனிடர் பத்திரிகையின் ஆசிரியர் குழு.



மார்ச் 5ம் திகதி நடத்திய கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் லியனகே உரையாற்றுகின்ருர். சங்கப் பொதுச் செயலாளர் தோழர் பாலா தம்பு செயலாளா தோழர் ஜயகொடி உபசெயலாளர் தோழர் ஜயதிஸ்ச ஆகியோர் மேடைவில் அமர்ந்திருப்பதைக் காண்க.

## நடவடிக்கை தொடர்பான

# ஐ.யு.எப். நிறைவேற்றுச் சபையின் செய்தி

1987 ஏப்ரல் 2-5ம் திகதிகளில் கூடிய சர்வதேச உணவு மற்றும் அதனேடிணைந்த தொழில்களின் சங்கத்தின் (ஐ.யு.எப்) நிறைவேற்றுச் சயை, தொழிற் சங்கம் மற்றும் ஜனநாயக உரிமைகள், சிவில் சுதந்திரங்கள் ஆகியவற்றை அடக்குதல் அல்லது கடுமையான வரையறு கட்டுப்படுத்துதல் ஆகியவற்றிற்காக நாடு முழுவதிலும் அவசரகால நிலைமையை இலங்கை அரசாங்கம் நீண்டகாலமாக நடத்திச் செல்வதை கடும் எழுச்சியுடன் கவனத்திற் கெடுக்கின்றது.

1987 மார்ச் 5ம் திகதி இலங்கையில், மானுட ஜனநாயக உரிமைகள் மற்றும் நீதி சமாதானத்திற்காக என நடத்தப்பட்ட சிஎம்யு ''நடவடிக்கைதினம்'' சார்பில், ஐயுஎப்பில் இணைந்துள்ள ஒரு அமைப்பாகிய சிஎம்யு வினுல் விளம்பரங்களை ஒட்டுவதற்கும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பதற்கும், எவ்வித க் காரணமும் காட்டாது தடை செய்தமையையும்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 5 நடவடிக்கை

## விளம்பரங்கள் ஒட்டவும் துண்டுப்பிரசுரங்க

## ஊர்வலத்திற்கு அனு

இலங்கையில் ஜனநாயக மானுட உரிமைகள் மற்றும் நீதி சமாதானத்திற்கான போராட்டம் எனும் தொனிப் பொருளின் கீழ் வெகுஜனங்களையும் விசேடமாக தொழிலாளர்களையும் பாதிக்கும் ஏழு விடயங்களையும் இட்டு தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான கவனத்திற்காட்படுத்தி மார்ச் 5ம் திகதி சிஎம்யு வினுல் நடத்தப்பட்ட வேலைநிறுத்தமும் கூட்டமும் வெற்றிகரமானவாறு நடந்தேறியது.

இத்தினத்தில், கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த சிஎம்யு கிளைகள் வேலை நிறுத்தம் செய்தபின் கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள சங்கத்தலைமையகத்திலிருந்து கூட்டம் நடைபெறவிருந்த டிமெல் மைதானத்திற்கு ஊர்வலமாகச் செல்வதை பொலீஸ்மா அதிபர் தடை செய்திருந்தார்.

சிஎம்யு எதிர்ப்புத்தினத்திற்குக் காரணமாயமைந்த விடயங்களையிட்டு மக்கள் மத்தியில் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்குத் தடைவிதிக்கப் பட்டிருந்ததுடன் அது தொடர்பாகப் பொது இடங்களில் சுவரொட்டிகளையும் ஒட்டலாகாது எனப் பொலீஸ் மா அதிபர் தடைவிதித்திருந்தார். இதனுல் இவ்விடயம் பற்றி பொதுமக்கள் மத்தியில் பிரச்சாரம் மேற்கொள்ள சங்கத்திற்கு இயலாமற்போனது. எனினும் கணிசமான அளவு அங்கத்தவர்கள் கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களிலிருந்தும் வருகை தந்திருந்தனர்.

மேற்படி நடவடிக்கை தொடர்பாக சங்கம், தேசிய மற்றும் சர்வதேச அமைப்புக்களுக்கு அறிவித்திருந்ததால் அவ்வமைப்புக்கள் பலவற்றிலிருந்தும் நடவடிக்கைக்கான தோழமையான ஆதரவுச் செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன, சில வெளிநாட்டு அமைப்புக்கள், சிஎம்யுவில் இந் நடவடிக்கைக்கு இடைஞ்சல் செய்யவேண்டாம் எனக் கோரும் தந்திகளை, ஜனுதிபதி, பிரதமர், மற்றும் தேசிய பாதுகாப்பு அமைச்சருக்கும் அனுப்பியிருந்தன.

இத்தினத்தில் ஊர்வலம் தடை செய்யப்பட்டிருந்தாலும், கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களைச் சேர்ந்த சங்கத்தின்கிளையுறுப் பினர்கள் பிற்பகலில் வேலை நிறுத்தம் செய்தபின் கூட்டம் கூட்டமாக டிமெல் மைதானத்தை நோக்கி வந்ததன் மூலம், எழுச்சிமிகு சூழ்நிலையொன்றை ஏற்படுத்தினர். சில கிளைகளின் அங்கத்தவர்கள் சுலோகங்களைக் கோசித்தவாறு வருகை தந்தனர்.

கூட்டம் பிற்பகல் 3.30க்கு ஆரம்பமாகியதுடன் சங்கத் தலைவர் தோழர் லியனகே கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர். சிஎம்யு எதிர்ப்பு தினத்திற்கு 'ஆதரவளித்து அனுப்பப்பட்டிருந்த வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப்பட்டன. அதன்பின் சங்கத்தின் பொதுச் செயலாளர் பாலா தம்பு எதிர்ப்புத்தினத்தின் தொனிப் பொருளாய் அமைந்த ஏழு விடயங்களையும் விளக்கி உரை நிகழ்த்தினுர். அவரது உரையையடுத்து கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**தீர்மானம் 1**

1987 மார்ச் 5ம் திகதி கொழும்பு டிமெல் மைதானத்தில் நடைபெறும் இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம் (சி எம் யு) வின் இப்பொதுக் கூட்டமானது இலங்கையில் தற்போது அமுலிலுள்ள அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராகவும் இந் நாட்டில் மானுட ஜனநாயக உரிமைகள் மற்றும் நீதி சமாதானத்திற்குமாக உறுதியோடு போராடுவதற்கும் வெளிப்படையாகவே மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்குக் நேரம் வந்துவிட்டது என்ற பொதுச்சபையின் அபிப்பிராயத்தை அங்கீகரிக்கின்றது.

எதிர்ப்பு தினம் தொடர்பாக சங்கத்தினுல் வெளியிடப்பட்ட 1987 ஜனவரி 15ம் திகதிய பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 7 விடயங்களையிட்டு தொழிலாளர் வர்க்கத்தினதும் பொது மக்களினதும் கவனத்தைத் திருப்புவதற்கு என சங்கத்தின் பொதுச்சபையினுல் தீர்மானிக்கப்பட்ட எதிர்ப்புத்தினத்தை வெற்றிகரமானவாறு அமுல்நடத்துவதற்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடவியன்ற நாடு முழுவதிலுமுள்ள சகல சி எம் யு உறுப்பினர்களுக்கும் இக்கூட்டம் மரியாதையைத் தெரிவித்துக் கொள்கின்றது.

அவசரகால நிலைமையின் கீழ் நாடு முழுவதிலும் எமது மக்கள் மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறையை முடிவுறுத்துவதற்காகவும், மானுட சிவில் சுதந்திரங்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்காகவும் இலங்கையில் மானுட உரிமைகளுக்கு மதிப்பளித்தலுக்காகவும் நீதி சமாதானத்திற்காகவும் என சங்கத்தினுல் மேற்கொள்ளப்படும் இன்றைய நடவடிக்கைக்கு ஆதரவளித்த ஏனைய தொழிற்சங்க அமைப்புக்களுக்கும் இக்கூட்டம் தனது மரியாதையை தெரிவித்துக் கொள்கின்றது. அதே வேளையில் சங்கத்தினுல் நடத்தப்படும் ''எதிர்ப்பு தினம்'' பற்றியும் அதன் நோக்கம் பற்றியும் பொது மக்கள் அறிந்து கொள்வதைத் தடுக்கும் நோக்கில், பொதுமக்களின் பார்வைக்குரிய இடங்களில் விளம்பரங்களை ஒட்டுதலையும், பொது மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தலையும் எவ்விதக் காரணமும் காட்டாது பொலீஸ் மா அதிபர் தடை செய்ததையிட்டு இக்கூட்டம் கண்டனம் தெரிவிக்கின்றது.

இக்கூட்டம் சங்கத்தின் அங்கத்தவர்கள் வேலைநிறுத்தம் செய்தபின், சங்கத்தலைமையகத்திலிருந்து கூட்டம் நடைபெறும் இடத்திற்கு ஊர்வலமாகச் செல்வதை, எவ்விதக் காரணமும் காட்டாது பொலீஸ் மா அதிபர் தடை செய்ததை மேலும் கண்டனம் செய்கின்றது.

இக்கூட்டம் வேறு தொழிற்சங்க அமைப்புக்களுடனும் ஏனைய அமைப்புக்களுடனும் சேர்ந்து தற்போது அவசரகால நிலைமையின் கீழ் நிலவும் அடக்குமுறையையும் கருத்திற் கொள்ளாது இந்நாட்டில் ஜனநாயக மானுட உரிமைகள் மற்றும் நீதி சமாதானம் ஆகியவற்றிற்கான பரந்துபட்ட அடிப்படையைக் கொண்ட வெகுஜன இயக்கத்தை மக்கள் மத்தியில் கட்டி யெழுப்பவதற்காகப் பாடுபட வேண்டும் எனத் தீர்மானிக்கின்றது.

**தீர்மானம் 2**

1987 மார்ச் 5ம் திகதி கொழும்பு டிமெல் மைதானத்தில் நடைபெறும் இலங்கை வர்த்தக கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம் (சி எம் யு) வின் இப் பொதுக்கூட்டம் கீழ்க்கண்டவற்றைக் கண்டனம் செய்கின்றது.

1. பாவனையாளர்களினதும் தேசிய பால் உற்பத்தியாளர்களினதும் நலன்களுக்குக் குந்தகமானவாறும் 1986 ஜுலை 31ம் திகதி முதல் அமுலாகும் வாறும் சகல சிஎம்யு உறுப்பினர்கள் உட்பட்ட தேசிய பால் சபையின் ஊழியர்களில் 80%த்திற்கும் அதிகமானவர்களை வேலை நீக்கம் செய்ததன்மூலம் தேசிய பால் சபையின் நடவடிக்கைகள் மற்றும் சொத்துக்களை மில்கோ எனும் தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்படைத்தமையும் தேசிய பால் சபையை மூடியமையும்.

2. ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டமை முற்று

முழுதாகவே நியா...
தென தொழில் மன்ற...
ன்றில் வழங்கப்பட்ட...
பின்படி, 1977 ஏப்ரல்...
த்திலிருந்து சி எம் யு...
த்தவர்களான 502 ...
நட்டஈடு மற்றும் நிலு...
சம்பளத்தை ...
மாறு இரண்டு வ...
ளுக்கு முன்பு 1984 ...
மாதத்தில் உயர்நீதி...
தினுல் வழங்கப்பட்ட...
பினை அமுல் நடத்...
இலங்கை உரக்கூட்...
பனம் தொடர்ந்தும் ...
வருதல்.

3. இ[...]கை வர்த்த...
தொழில் பொது தொ...
ளர் சங்கம் (சி எம் ய...
றும் பாட்லீட் அன் ...
லிமிட்டட் அங்கத்து...
கிக்கும் இலங்கை மு...
மார் சம்மேளனத்...
இடையில் ஏற்படுத்...
டுள்ள கூட்டுடன்ப...
யில் குறிப்பிடப்பட்...
சேவை நிபந்தனைகளி...
நிறுவனத்தின் ஆண்...
யர்களினுல் முன்பு ...
பட்ட கடமைகளைச் ...
வதற்காக பாட்லீட்...
கம்பெனியினுல் கொ...
த்துக்காரரொருவ...
எனக் காட்டிக் செ...
தமது [...]ாம்ப்ளிங் ப...
கட[...]யிலீடுபடுத்தப்...
பெண் ஊழியர்க...
குறைந்த வேதனம் ...
வருவது மற்றும், அ...
சுரண்டலுக்குள்ளாக்...
மற்றும், சங்கம் இத...
டர்பாகத் தொழில் ...
யாளரிடம் புகாரிட்...

## இலங்கையில் ஜனநாயக மானுட உரிமைகள் மற்றும் நீதிக்கும் சமாதானத்திற்

## திரண்ட கொழும்பு மற்றும் சுற்றுப்புறங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கை வெற்றிகரமாக நடைபெற்றது

## ரங்கள் விநியோகிக்கவும் தடை விதிப்பு!

## அனுமதி மறுப்பு!

ாகவே நியாயமற்ற
தொழில் மன்ற மொ
வழங்கப்பட்ட தீர்ப்
டி, 1977 ஏப்ரல் மாத
ருந்து சி எம் யு அங்க
ர்களான 502 பேருக்கு
ஈடு மற்றும் நிலுவைச்
ாத்தை வழங்கு
இரண்டு வருடங்க
முன்பு 1984 ஆகஸ்ட்
த்தில் உயர்நீதிமன்றத்
வழங்கப்பட்ட தீர்ப்
அமுல் நடத்துவதில்
கை உரக்கூட்டுத்தா
தொடர்ந்தும் தவறி
ல்.

கை வர்த்த கத்
தில் பொது தொழிலா
சங்கம் (சி எம் யு) மற்
ாட்லீட் அன் கம்பனி
டட் அங்கத்துவம் வ
ம் இலங்கை முதலாளி
சம்மேளனத்திற்கும்
யில் ஏற்படுத்தப்பட்
கூட்டுடன்படிக்கை
குறிப்பிடப்பட்டுள்ள
நிபந்தனைகளின்மீது
னத்தின் ஆண் ஊழி
ினால் முன்பு ஆற்றப்
கடமைகளைச் செய்
காக பாட்லீட் அன்
னியினால் கொந்தார
காரரொருவரூடாக
காட்டிக் கொண்டு
சாம்ப்ளிங் பகுதியில்
பிலீடுபடுத்தப் ட
ஊழியர்களுக்கு
ந்த வேதனம் வழங்கி
து மற்றும், அவர்களை
டலுக்குள்ளாக்குவது
ம், சங்கம் இது தொ
ாகத் தொழில் ஆணை
ிடம் புகாரிட்டு மூன்

று வருடகாலமாக மேற்படி தொழிலாளர்களின் மனக்குறைகள் தொடர்பான வழிவகைகளை ஏற்படுத்துவதைக் தாமதப்படுத்தியபின் சங்கம் வேண்டிக் கொண்டவாறு கைத்தொழில் தகராற்றுச் சட்டத்தின்கீழ் இவ்விடயங்கள் தொடர்பாக நிறுவனம் மற்றும் சங்கத்திற்குமிடையில் நடைபெறும் தகராறு தொடர்பாக உரிய விசாரணையொன்றை நடத்துவதை தொழில் ஆணையாளர் ஈற்றில் நிராகரித்தமை.

4. பியோ பேவரேஜஸ் நிறுவனத்தின் பாரம்தூக்கி (போக்லிப்ட்) இயந்திர இயக்குனர்களின் இரவு வேலை தொடர்பாக நியாயமற்ற நிபந்தனைகளை விதித்தமை மற்றும் அது தொடர்பாக 1986 நவம்பர் 2ம் திகதி சி எம் யு கிளையினால் எதிர்ப்பு வேலை நிறுத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நிறுவனத்தின் வளவுக்கு வெளியே நடைபாதையில் மறியல் நடவடிக்கையிலீடுபட்டிருந்த சி எம் யு உறுப்பினர்களின் கையிலிருந்த சுலோக அட்டைகளை பொலீசார் பலவந்தமானவாறு பறித்தமை.

5. அரச பயிர்ச் செய்கை கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகங்களில் கடமை புரிந்த சி எம் யு உறுப்பினர்களை பலவந்தமானவாறு இடமாற்றம் செய்தல் மற்றும் சட்டவிரோதமானவாறு வேலை நீக்கம் செய்தல்.

6. இலங்கை கப்பற்றொழிலாளர்கள் 17 பேர் சர்வதேச போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தில் (ஐ. டி. எப்) அங்கத்துவம் வகிக்கும் இத்தாலி போக்குவரத்துத் தொழிலாளர் சங்கத்தின் தலையீடு காரணமாக, இத்தாலியிலுள்ள வெனிஸ் துறைமுகத்தில் வைத்து பனமா கொடியின் கீழ் மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமான கப்பலின் கப்டனை மேற்கு ஜெர்மனைச் சேர்ந்தவரிடமிருந்து 1986 செப்டம்பர் 19ந் திகதி மேலதிக வேதனத்தைப் பெற்றுக் கொண்டதன்பின் 1986 செப்ரம்பர் 21ம் திகதி கட்டுநாயக்கா சர்வதேசவிமான தளத்திற்கு வருகை தந்தபோது மேற்படி கப்பலின் கப்டனிடமிருந்து பலவந்தமாகப் பணம் பெற்றுக் கொண்டதாகச் செய்யப்பட்ட போலியான குற்றச்சாட்டின்மீது . இலங்கைப் பொலீசாரினால் அப்பதினேழு கற்பற்றொழிலாளர்களும் கைது செய்யப்பட்டமை மற்றும் அவர்களிடமிருந்த பணம் பொலீசாரினால் பலவந்தமாகப் பொறுப்பேற்கப் பட்டமை.

7. சம்பளம் தொடர்பான கோரிக்கை யொன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட 1980 ஜூலை வேலை நிறுத்தத்தின் போது வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்களை மீண்டும் வேலையிலமர்த்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்தும் தவறி வருவது மற்றும் தமது சம்பளம் தொடர்பான கோரிக்கையின் மீது 1987 பெப்ரவரி 23 முதல் 25 வரை தமது வேலையிடங்களுக்கு முன்னால் மறியலில் ஈடுபட்டிருந்த பல்வேறு சங்கங்களுக்குரிய அங்கத்தவர்கள் பொலிசாரினால் வன்முறையான விதத்தில் கலைக்கப்படமை.

மேற்படி விடயங்கள் தொடர்பாக நிவாரணம் பெறுவதற்கான உரிய சகல வழிவகைகளினூடாகவும்சங்கம் செயற்பட வேண்டும் மென இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

## பொலீஸ் மா அதிபருக்கு சங்கத்தின் கடிதம்

1987 மார்ச் 5ம் திகதி எமது சங்கத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கை தொடர்பாக, 1987 ஜனவரி 15ம் திகதியிட்டு வெளியிடப்பட்ட பிரகடனத்தின் பிரதியொன்றையும், இதேவிடயம் தொடர்பாக எம்மால் பிரதமருக்கும், அமைச்சரவையுறுப்பினர்களுக்கும் பிரதியுடன் ஜனாதிபதி ஜே. ஆர், ஜயவர்தனவுக்கு அனுப்பப்பட்ட 1987 பெப்ரவரி 5ம் திகதிய கடிதத்தின் பிரதி யொன்றையும் தங்களின் அறிதலுக்காக இத்துடன் இணைத்தனுப்புகின்றோம்.

கடந்த காலத்தில் எமது சங்கம் பல்வேறு விடயங்களின் மீது இதேபோன்ற நடவடிக்கைகளை எடுத்துள்ள பல சந்தர்ப்பங்களைத் தாங்கள் ஒரு பொலீஸ் அதிகாரியாகவிருந்த நிலையில் அறிந்திருப்பீர்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஜனநாயக உரிமைகளை ஒடுக்குவதற்காக அல்லது மட்டுப்படுத்துவதற்காக பொலீசாருக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வதிகாரங்களை இவர்கள் ஜனநாயக உரிமைகள் மற்றும் சிவில் சுதந்திரங்கள் தொடர்பாகத் தாம் எந்தவித அக்கறையும் காட்ட வேண்டியதில்லை என்ற கோதாவில் அல்லது அவைகள் இந் நாட்டில் முற்றாகவே இல்லாதொழிக்கப்பட்டு விட்டன என்ற கோதாவில் அடிக்கடியும் அல்லது எவ்வளவு காலத்திற்கு வேண்டுமெனத்தாம் கருதுகின்றார்களோ அவ்வளவு காலத்திற்குப்பிரயோகிக்கின்றனர். மறுபுறத்தில் அவர்கள் பொதுதேர்தலைத் தள்ளிப்போடுவதற்காக நடத்தப்பட்ட சர்வசன வாக்கெடுப்பின்போதும் அபகீர்த்திமிக்க 1983 ஜூலை 'இருண்டவாரத்' தின்போதும் ''அவசரகால நிலைமை'' அமுலில் இருந்ததைக் கருத்தில் கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட வெளிப்படையான காடைத்தனத்தையும் சட்ட சீர்குலைவினையும் அவர்கள் அனுமதித்தனர்.

தாங்கள் தற்போது வகிக்கும் பதவியை கடந்த வருடம் பெற்ற சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் ''கொக்கோ கோலாவை'' விநியோகிக்கும் நிறுவனத்தின் ஊழியர்கள் அந்நிறுவனத்திற்கு முன்னால் உள்ள நடைபாதையில் அமைதியானவாறு மறியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களிடமிருந்த சுலோக அட்டைகளைப் பொலீசார் பலவந்தமானவாறு பறித்த ஒரு சந்தர்ப்பம் தொடர்பாக நான் தனிப்பட்டமுறையில் தங்களது கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அச் சந்தர்ப்பத்தில் அவசரகால நிலைமை எனும் போர்வையில் பொலீசார் மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் சிவில் சுதந்திரங்களை ஒடுக்குவதற்குப் பதிலாக அவற்றை அங்கீகரிக்கவேண்டியது அவசியமானது என்பதை நான் தங்களுக்குச் சுட்டிக் காட்டியது நினைவிருக்குமென எண்ணுகிறேன்.

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பிரகடனத்திலிருந்து மக்களின் கவனத்திற்கு உட்படுத்த நாம் எதிர்பார்க்கின்ற அடிப்படைக் கொள்கைக்குரிய விடயங்களில் அமைதியானவாறு மறியல் நடவடிக்கையில் ஈடுபடல், பொது ஊர்வலங்களை நடத்துதல் போன்ற உரிமைகள் உட்பட தொழிற்சங்க உரிமைகள்மீதான தாக்குதல்கள் உள்ளடங்களாக நீண்டகாலமாகத் தொடர்ச்சியாக நடைபெறும் அடக்குமுறையும் ஒன்று என்பதை தாங்கள் காணவியலும்

(7ம் பக்கம் பார்க்க)

னத்திற்குமான சிஎம்யு எதிர்ப்புத்தினக் கூட்டத்தின் போது டிமெல் மைதானத்தில்
ங்களைச் சேர்ந்த கிளைகளின் அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக மானுட உரிமைகளுக்கான போராட்டத்தில் சிஎம்யு எப்பொழுதும் முன்னணியில் ....

**சங்கத்தினால் பெப்ரவரி 5ம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. இதன் பிரதிகள் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்டன.**

மார்ச் 5ம் திகதி எம்மால் தீர்மானிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு அடிப்படையானதும், கவனத்திற்கு ஆட்படுத்த வேண்டுமென நாம் கருதுவதுமான ஏழு பிரதான விடயங்களையிட்டு தேசிய மற்றும் சர்வதேசரீதியில் ஆராயப்படவேண்டும் என நாம் கருதுகின்றோம்.

தங்களுடைய அரசாங்கத்தின் கீழ் மட்டுமின்றி இந்நாடு 39 ஆண்டுகளுக்கு முன் அரசியல் ரீதியாகச் சுதந்திரம் பெற்றபின் இற்றைவரை ஆட்சியிலிருந்த சகல அரசாங்கங்களின்கீழும் இந்நாட்டில் ஜனநாயக மற்றும் மானுட உரிமைகளுக்கான போராட்டத்தில் எமது சங்கம் முன்னணியில் இருந்துள்ளது என்பதை தாங்களும், பிரதமரும் அதேபோன்று தங்களின் மூத்த அமைச்சர்களும் அறிவார்கள்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையின் கீழான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் கூட்டரசாங்கத்தின்கீழ். பிரதமர் என்றவகையில், 1971 மார்ச் 16ம் திகதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் "அவசர கால நிலைமையைப் பிரகடனப்படுத்தியதன்பின், 20.3.1971 அன்று கூடிய எமது பொதுச் சபையானது, "அவசரகால நிலைமையை" உடன் முடிவுறுத்துமாறு பிரதமரைக் கோரவேண்டுமெனத் தீர்மானித்தது.

"அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தற்கான காரணம் என்னவென்பது "அவசர கால நிலைமையும் மக்களின் அடிப்படைச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக சுதந்திரங்கள்" என்ற தலைப்பிட்டு எம்மால் பிரதமருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மகஜர் ஒன்றில் குறிப்பிடப்பட்டிருந்தது. இம்மகஜரின் பிரதிகள் திரு. ஆர். பிரேமதாசா உட்பட சகல ஜனப்பிரதிநிதிகள் சபையின் அங்கத்தவர்களுக்கும் எம்மால் அனுப்பப்பட்டன. ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் திரு. ஆர். பிரேமதாசா 5/4/1971 ல் உரையாற்றியபோது எமது மகஜரைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து "ஒரு முக்கியமான மகஜர்" என அதனைக் குறிப்பிட்டார். அவசரகால அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவது பற்றியே அம்மகஜர் அமைந்திருந்ததாலேயே அதை அவர் அங்கு சமர்ப்பித்தார். [illegible] மகஜரை வாசிக்கு[illegible], அதற் குறிப்பிட்டிருந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு அதன்படி செயற்படுமாறும் அவர் பிரதமருக்கும் அவருடைய அரசாங்கத்துக்கும் வேண்டுகோள் விடுத்தார்.

அம் மகஜரில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

"இந்நாட்டின் சாதாரண சட்டத்தின்கீழ் விசேடமான குற்றங்கள் தொடர்பாக வழக்கு விசாரணைகளைச் செய்வதற்கு நீதிமன்றத்தின் முன் போதுமானளவு சாட்சியங்கள் இருந்தாலொழிய அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சந்தேகப்படுகின்ற காரணத்தினாலோ அல்லது" "அராஜகவாத" கருத்துக்களைக் கொண்டுள்ளனர் என்ற காரணத்தினாலோ அல்லது பல்வேறு இடங்களில் பொலீசாரினால் வெடிக்கும் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன என்று கூறப்படுவதாலோ, அவசர கால பிரமாணங்களின் கீழ் பொலீசாரினால் கைது செய்யப்பட்ட அல்லது சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல நபர்களையும் உடன் விடுதலை செய்யமாறு நாம் மேலும் வேண்டுகின்றோம்.

"தங்களின் அரசாங்கம் தற்போது நடத்திச் செல்லும் செயல் திட்டத்தினை நிறுத்தாது தொடர்ந்து நடத்திச் செல்லுமாயின் அதனால் விளைவது என்னவெனில் இலங்கையில் முதலாளித்துவ முறையின் இடைவிடாத சீரழிவின் பிரதிபலனாக எமது மக்கள்படும் இடைஞ்சல்கள் மென்மேலும் உக்கிரமடைவது மட்டுமேயாகும்"

"ஜனநாயக உரிமைகள் மற்றும் சிவில் சுதந்திரங்களை மீண்டும் பெறல்" எனும் தலைப்பிட்டு எம்மால் ஜனப்பிரதிநிதிகள் சபையின் சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பப்பட்ட 1971 ஜூலை 14ம் திகதிய கடிதத்தின் முற்று முழுதான பத்து பந்திகளையும் 1971 செப்ரம்பர் 8ம் திகதிய பாராளுமன்றக் கூட்டத்தின்போது எடுத்துக்கூறுவது பொருத்தமானதென, தற்போதைய காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா அவர்கள் கருதியுள்ளார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தங்கள் அமைச்சரவை உறுப்பினர்களுக்கும் நினைவுபடுத்துவது பொருத்தமானது என நாம் மேலும் கருதுகின்றோம். இக்கடிதத்தின் பகுதிகளை விளக்கிக் கூறுவதற்கு முன்பதாக உரையாற்றிய காமினி திசநாயக்க அவர்கள் "மக்களின் மானுட உரிமைகள் பறிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் தொடர்பான சாராம்சம் ஒன்று" அதில் அடங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

தங்களின் அரசாங்கம் 1977 ஜூலையில் ஆட்சிக்கு வந்த நாள் முதல், பல்வேறு காரணங்களின் மீது பல்வேறு கால கட்டங்களுக்கு" "அவசர கால நிலைமை" யைப் பல தடவைகள் பிரகடனம் படுத்தியதன்பின் ஏற்படுத்தப்பட்டுள்ள தற்போதைய அவசர கால நிலைமையை தங்கள் அரசாங்கம் 4½ வருடங்களுக்கு மேலான காலத்திற்கு மாதாமாதம் நீடித்துள்ளதுடன் தொடர்ச்சியாக நடத்திவந்துள்ளது. காமினி திசநாயக்க அவர்களும் தாங்கள் எதிர்கட்சிலிருந்தது போலவே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கத்திற்கு எதிரான கட்சியில் இருந்த காலத்தில் சுட்டிக்காட்ட விழைந்த எமது 1971 ஜூலை 14ம் திகதிய கடிதத்தின் கீழ்க்காணும் பந்திகளை தங்களின் கவனத்திற்கு ஆட்படுத்துவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமானதாகும்.

"பொலிசாரினால் திட்டவட்டமான அனுமதி வழங்கப்பட்டாலொழிய, இலங்கையில் எந்தவொரு இடத்திலும், பொதுக்கூட்டமொன்றை நடத்துவது தொடர்ச்சியானவாறு தடை செய்யப்பட்டிருத்தல்.

"பொலீசாரின் திட்டவட்டமான அனுமதி இன்றி மக்களிடையே எந்தவொரு துண்டுப் பிரசுரத்தினையும் அல்லது அறிவித்தலை விநியோகித்தல் அல்லது, எந்தவொரு விளம்பரத்தையும் பொது இடங்களில் ஒட்டுதல் தொடர்ச்சியானவாறு தடை செய்யப்பட்டிருத்தல்,

"அரச மற்றும் தனியார் துறைகளில் தொழிலாளர்களுக்கு உரித்தான வேலை நிறுத்தம் செய்யும் அடிப்படை உரிமையை அத்தியாவசிய சேவைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடர்ச்சியானவாறு அடக்குதலுக்குள்ளாக்கியமை மற்றும் இதன்படி, தொழில் தருநர்களின் சுரண்டல்களுக்கும் பழிவாங்களுக்கும் தொழிலாளர்கள் உள்ளாக்கப்பட்டுள்ளனர் என்றும், தொழிலாளர்கள் என்ற வகையில் தமது உரிமைகள் மற்றும் தேவைகளைப் பாதுகாத்தலுக்காக கூட்டானவாறு செயற்படும் உரிமையை அவர்கட்கு இல்லாமற் செய்தல்.

(அன்சாட் அறிக்கை-1971 செப் 8-452 வது பந்தி)

காமினி திசாநாயக்க அவர்கள் எமது 1971 ஜூலை 14ம் திகதிய கடிதத்தில் இறுதி பந்தியைச் சுட்டிக்காட்டவில்லை. அது எதனால் என்பதை எம்மால் நன்றாகப் புரிந்து கொள்ளவியலும். அது கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது.

"பிரேதங்கள், துர்நாற்றம் இல்லாமலிருந்தாலும், மனித உயிர்களுக்கு மற்றும் சுதந்திரத்திற்கு எந்தவொரு கவனமும் செலுத்தப்படாத அவசரகால நிலைமையின் உயிராபத்துமிக்க சாபக்கேடு தொடர்ந்தும் இருந்து வருவதால் இக்கடிதத்திற்கு பதிலொன்றை அனுப்புவதன்மூலம் எமக்கு சாதகத் தன்மையைக் காட்டுவீர்களாயின் நன்றியுடையவர்களாவோம். தங்களை தெரிவு செய்த மக்கள் இந்த சாபக்கேட்டிலிருந்து விடுபடுவதற்காக அம்மக்களுக்கு அனுபவிக்க வியலாத சட்டரீதியான உரிமை தங்களுக்குண்டு."

இன்று தங்கள் அரசாங்கம் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் பின்பற்றும் யுத்தக் கொள்கை காரணமாக அவ்விரு பிரதேசங்களின் 'பிரேத துர்நாற்றநிலை" நிலவுகிறது மானுட உரிமைகளை மீறுதல் மற்றும் பகிரங்கமாகவே நடைபெறும் அநீதி அன்றாட மக்களின் வாழ்க்கையில் ஒரு பகுதி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கும் போது ஜனநாயக உரிமைகள் மற்றும் தனி மனித சுதந்திரங்களை அடக்கி தங்களுடைய அரசாங்கம் நாடு முழுவதும் நடத்திச் செல்லும் "அவசரகால சாபக்கேடு" அவ்வாறே தொடர்ந்து நடத்திச் செல்லப்படுகின்றது. துரதிருஷ்டவசமாக "அவசரகால நிலைமை" யை அரசியலமைப்பு ரீதியாக முடிவுறுத்துவதற்கு 1971ல் மக்களுக்கிருந்த உரிமைக்கு மேலான உரிமை இன்னும் மக்களுக்கில்லை.

1987 மார்ச் 5ம் திகதி வேலை நிறுத்தமொன்றைச் செய்து அன்றைய தினத்தில் சங்கத்தின் பகிரங்க ஊர்வலமொன்றையும் பொதுக் கூட்டமொன்றையும் ஏற்பாடு செய்வதற்கு எமது சங்கம் தீர்மானித்துள்ளது இந்நிலைமையின் கீழேயேயாகும். எமது பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தமது எதிர்ப்பினை, ஜனநாயகரீதியில் அதாவது திட்டவட்டமானவாறு கருத்துக்களை முன்வைப்பதற்கும் அதனூடாக இலங்கையில் ஜனநாயக மற்றும் மானுட உரிமை மற்றும் நீதி சமாதானத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான சந்தர்ப்பம் கொழும்பு மற்றும் நாட்டில் ஏனைய பகுதிகளிலும் உள்ள எமது ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களுக்கு கிடைக்கும்.

எமது பிரகடனத்திலும், இக்கடிதத்திலும், எம்மால் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை உரியவாறு பரிசீலனை செய்து தாங்களும் தங்கள் அர்சாங்கமும் அதற்குரிய பரிகாரத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் என நம்புகிறோம்,

---

**ஆபத்துமிக்க சூழ்நிலையிலும் மார்ச் 5 நடவடிக்கையில் கலந்து கொண்டமையிட்டு, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனக் கிளைக்கும், ஆனையிறவு தேசிய உப்புக் கூட்டுத்தாபனக் கிளைக்கும் பொதுச்சபையின் பாராட்டு.**

வடக்கில் நிலவும் யுத்த நிலைமையின் மத்தியில் மட்டுமின்றி, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்திற்கு மிக அண்மையிலுள்ள பரந்தன் சந்தியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ள நிலையிலும் கூட சங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க மார்ச் 5ம் திகதி பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் சி எம் யு கிளைகளினால் அன்று காலை 10.30 லிருந்து 12 மணிவரை வேலை நிறுத்தமொன்றைச் செய்து பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தி சங்கத்தினால் அன்று நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்ட விடயங்களை அங்கீகரிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன.

இவ்வருடம் பெப்ரவரி மாதமுதல் பரந்தனில் இருந்துவரும் நிலைமையின் கீழ் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தில் மார்ச் 5ம் திகதி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளக்கூடிய சாத்தியப்பாடுகள் இல்லை என்றே சங்கத் தலைமையகம் கருதியது என்பதுடன், மார்ச் 5ம் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் போதும் மார்ச் 5ம் திகதி டிமெல் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திலும் பொதுச் செயலாளர் இதுபற்றிக் குறிப்பிடும் போது, பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனக் கிளைகள் நடவடிக்கையில் கலந்து கொள்வதற்கான சாத்தியப்பாடுகள் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனத்தின் இரு கிளைகளிடமிருந்தும் கிடைத்துள்ள அறிக்கைகளின்படி மே தினத்தில் எமது சங்க அங்கத்தவர்கள் மட்டுமின்றி வேறு தொழில் சங்கங்கள் இரண்டினைச் சேர்ந்த அங்கத்தவர்களும் இதில் கலந்து கொண்டுள்ளனர். என்பது மட்டுமின்றி அவர்களில் பலர் மேற்படி சங்கங்களினின்றும் விலகி சி எம் யு விலும் சேர்ந்துள்ளனர்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 வருடங்களாக நடைபெற்ற வழக்கு..

இலங்கையில் தொழில் மன்றங்களினுல் அல்லது தொழில் நீதிமன்றங்களினுல் வழங்கப்படும் தீர்ப்புக்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமாகவிருக்குமாயின் ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி அதற்கு எதிராக அப்பீல் செய்வதையும் இதன்மூலம் மேலும் பல வருடங்களுக்கு ஏற்படும் தாமதத்தைப் பயன்படுத்தித் தொழிலாளரை விரக்தியடையும் நிலைக்குத் தள்ளவும் தொழிற்றருனர்கள் தவறுவதில்லை. இது மட்டுமின்றி மேற்படி தாமதம் பற்றி ஏற்கெனவே தெரிந்து கொண்டிருப்பதால், இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சங்கத்தின் செயலூக்கமுள்ள அங்கத்தவர்களையும், கிளைத் தலைவர்களையும் முற்று முழுதாகவே நியாயமற்றவாறு வேலை நீக்கம் செய்யும் விடயமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

கண்டியிலுள்ள பிரான்சிஸ் பெரேரா என்ற நிறுவனம், 1977ம் வருடம் நவம்பர் 17ம் திகதியன்று, எமது சங்கத்தின் அங்கத்தவரான தோழி ஐ. ஜயசிங்க என்பவரை வேலை நீக்கம் செய்தது. இந்நியாயமற்ற வேலை நீக்கத்தை எதிர்த்து சங்கம் கண்டி தொழில் நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கு 1981 ஆகஸ்ட் 6ம் திகதி முடிவடைந்ததுடன், இவரது வேலை நீக்கமானது தொழிற்சங்கத்தில் சேர்ந்ததற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பழிவாங்கல் நடவடிக்கை என்ற வகையில் ரூபாய் 11,200த்துடன் மீண்டும் வேலையும் வழங்கவேடுமெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. இத்தீர்ப்பின்படி தொழிலாளிக்குரிய நிலுவைப் பணம் தீர்ப்பு வழங்கப்பட்ட 14 தினங்களுக்குள் கண்டி தொழில் ஆணையாளர் வசம் நிறுவனத்தால் வைப்புச் செய்யப்படவேண்டும் எனவும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

தீர்ப்பின்படி மீண்டும் வேலைக்குச் சமூகமளித்த தோழி ஜயசிங்கவிடம் நிர்வாகம் தீர்ப்பிற்கெதிராக அப்பீல் செய்துள்ளதாக அறிவித்தது.

பல்வேறு காரணங்களையிட்டு அப்பீல் கோர்ட் விசாரணை தள்ளிப்போடப்பட்டு ஈற்றில் 1987 பெப்ரவரி 5ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பில், ஏற்கெனவே தொழில் நீதிமன்றத்தினுல் வழங்கப்பட்ட தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது.

மேற்படி அங்கத்தவர் வேலை நீக்கம் செய்யப்பட்டு சுமார் 10 வருடகாலத்தின் பின்பே இத் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பது இங்கு சுட்டிக்காட்டற்பாலதாகும்

# மேதினத்தில் இடம்பெற்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சார் வன்முறை நடவடிக்கைகளை மேற் கொள்ளும் அதிகாரமும் வழங்கப்பட்டது. (அவசரகாலப் பிரமாணம் இல. 12)

இதனைக் கருத்திற்கொள்ளாது நாட்டின் பல பிரதேசங்களில், பல அமைப்புக்கள் மேதினக் கூட்டங்களையும் சில இடங்களில் ஊர்வலங்களைக் கூட நடத்தின. கொழும்பில் நடத்தப்பட்ட மேதினக் கூட்டங்களுக்காக மற்றும் ஊர்வலங்களுக்காக கூடிய மக்கள் கூட்டத்தின் மீது பொலீசார் பல்வேறு அளவுகளில் வன்முறை தாக்குதல்களை மேற்கொண்டதும் இதன் பின்னணியின் கீழேயாகும். நாராஹென்பிட்டி அபயாராம விகாரை வளவுக்குள் நடத்தப்பட்ட மேதினக் கூட்டம் முடிவடைந்த தருணத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் பிரார்த்தனை மண்டபத்தில் இருந்த மாணவர் ஒருவரும், விகாரை வளவுக்குள்ளிருந்த தொழிலாளியொருவரும் மரணமடைந்தனர் மறுபுறத்தில், இன்னும் பலர் கடும் காயமுற்றனர் யாழ்குடாநாட்டில் நடத்தப்பட்ட மேதின ஊர்வலம், கூட்டம் ஆகியவற்றில் கலந்து கொண்ட இதனைவிட மிகப் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஜனதிபதி ஜயவர்தனவின் ஆணையை அமுல்படுத்துவதற்கு அங்குபொலீஸ் இல்லாத காரணத்தினுல் எவருக்கும் காயமோ, பாதிப்போ ஏற்படவில்லை.

அபயாராம விகாரை வளவில் பொலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததன்பின், காயமடைந்த ஆட்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதை பொலீசார் இடைஞ்சல் செய்து தாமதப்படுத்தியதாக எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. பொலீஸ் அல்லது ஆயுதப் படையைச் சேர்ந்தவர்களால் ஏற்படுத்தப்படும் கொலைகள் தொடர்பான அவசரகால நிலைமைப்பிரமாணங்களின்கீழ் (அவசரகாலப்பிரமாணம் இல. 55) பொலீஸ் மா அதிபரினுல் வெளியிடப்பட்டுள்ளதாகக் கூறப்படும் ஆணையொன்றின்கீழ் இம்மரணங்கள் தொடர்பாக மறுதினம் (மே 2ம் திகதி) நடத்தப்படத் தயாராகவிருந்த மாஜிஸ்திரேட் விசாரணை நிறுத்தப்பட்டதாக எம்மால் அறியக்கூடியதாகவுள்ளது.

இப்பிரமாணத்தின் கீழ், கொழும்பு உயர் நீதிமன்றத்தின் நீதிபதியொருவரால் அம்மரணங்களுக்கான காரணங்கள் தொடர்பாக விசாரணையொன்றை நடத்துவதற்கு அவசியமாகியுள்ளது எனவும் அப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீதிபதியொருவரின் முன்னுல் சாட்சியமளிக்க வேண்டியது பொலீஸ் மா அதிபரேயாகும். மேலும் அப்பிரமாணத்தின்படி வழக்கு அறிக்கைகள் ''பொதுமக்களின் பார்வைக்காகப் பகிரங்கமாக வைத்தலாகாது''.

இந்நிலைமையின் கீழ் மேதினத்தில் பொலீஸ் வன்முறை நடவடிக்கைகளுக்குள்ளான மற்றும் உள்ளாகாத அமைப்புக்கள் உள்ளடங்கலாக, இங்கு கீழே ஒப்பமிடும் தொழிற்சங்க அமைப்புக்களின் பிரதிநிதிகளான நாம் மே தினத்தில் பொலீசார் துப்பாக்கியினுல் சுட்டமை மற்றும் கண்ணீர்ப்புகை, குண்டாந்தடிகள் ஆகியவற்றை உபயோகித்து மேற்கொள்ளப்பட்ட கொலைகள் மற்றும் காயமேற்படுதல் ஆகியவற்றிற்கு ஜனுதிபதி ஜயவர்தன, மற்றும் அவரது அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என அறிவிக்கின்றோம்.

''வெகுஜனப் பாதுகாப்பிற்காக'' என்று கூறி, மேதினப் பொது ஊர்வலம் மற்றும் கூட்டங்களைத் தடை செய்தமை, தொழிலாளர்களினதும், மற்றும் இந்நாட்டின் ஏனைய மக்களினதும் ஜனநாயக உரிமைகள் மீது மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு கடும் தாக்குதல் எனவும், மேதினத்தில் பொலீசார் வன்முறையான விதத்தில் செயற்பட்டமை மானுட உரிமைகளை மீறிய மற்றுமொரு சந்தர்ப்பம் எனவும் நாம் கண்டனம் செய்கின்ரேம்.

அரச விரோத சக்திகளே, அவைகள் வன்முறை நடவடிக்கைகள் மூலமாக அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதிசெய்கின்றன எனும் பிரச்சாரத்தைக் துரிதப்படுத்துவதன் மூலம் மேதினத்தில் நிகழ்ந்த பொலீஸ் வன்முறை நடவடிக்கைகளுக்குத்தாமே பொறுப்பு என்பதை மூடிமறைப்பதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்பதே எமது கருத்தாகும்.

அபயாராம விகாரை வளவில் நிகழ்த்தப்பட்ட பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசேட அவதானத்தைச் செலுத்தி, மேதினத்தின்போது, பொலீசார் செயற்பட்ட விதம் தொடர்பாக பகிரங்க விசாரணையொன்றை நடத்த வேண்டும் என நாம் வலியுறுத்திக் கூறுகின்ரேம்.

இவ்வறிக்கையில் கீழ்க்காணும் தொழிற்சங்க அமைப்புக்கள் கையெழுத்திட்டுள்ளன.

1. இலங்கை தொழிற் சங்க மத்திய சபை.
2. சி எம் யு
3. அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார் சங்கம்
4. சிறீலங்கா சுதந்திர ஊழியர் சங்கம்
5. சிறீலங்கா மகாஜன தொழிற்சங்க சம்மேளனம்.
6. இலங்கை பயிர்ச் செய்கை சேவையாளர் சங்கம்.
7. இலங்கை வங்கி யூழியர் சங்கம்.
8. தேச விடுதலை தொழிலாளர் மத்திய நிலையம்
9. மத்திய வங்கியூழியர் சங்கம்.
10. அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்.
11. ஐக்கிய தொழிற் சங்க சம்மேளனம்.
12. உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம்.
13. தோட்ட சேவையாளர் சங்கம்.

# கொழும்பில் இடம் பெற்ற குண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோகித்து கொழும்பில் இதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட பயங்கரவாத வன்செயல்களுக்குரிய பொறுப்பினை தமிழ் பேசும் குழுவொன்று ஏற்றுக் கொண்டிருந்தது என்பதால் கொழும்பில் மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இப் பயங்கரமான வன்செயலுக்கும் இதே குழுவே பொறுப்பு என சந்தேகிப்பதற்கு மேற்கூறப்பட்டவை மேலதிகக் காரணங்களாக அமைந்துள்ளன.

ஆகாய மார்க்கமாக குண்டுத்தாக்குதல்களை நடத்துதல் மற்றும் தரையிலிருந்தும் கடலிலிருந்தும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்ளல் உட்பட்ட அரசாங்கத்தின் ஆயுதப் படையினரால் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சாதாரண குடிமக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும், அல்லது ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைக்கு பழிவாங்குவதற்காக என்று கூட மேற்கொள்ளப்படும் இத்தகைய எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கையையும் நியாயமானதென ஏற்றுக்கொள்ள முடியாது என இந்நிறைவேற்றுச் சபை அறிவிக்கின்றது. இது எவ்வாறெனினும் அத்தகைய பயங்கரவாதக் குற்றச் செயல்கள் வடக்குக் கிழக்குப் பிரதேசங் களிலுள்ள தமிழ் மொழிபேசுகின்ற பொதுமக்களின் நன்மைக்கு உதவப்போவதில்லை என்பதுடன், அரசாங்கம் தான் விரும்புவதாகக் கூறியுள்ள பேச்சுவார்த்தை ஊடாக அரசியல் தீர்வொன்றைக் காணுது மேற்படி பிரதேசங்களில், ''பயங்கரவாத முகாம்களை'' அழிப்பதாகக் கூறிக் கொண்டு வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தனது யுத்தக்கொள்கையை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்குரிய ஒரு சாட்டாக இதனை கொள்வதற்கு இது இடமளிக்கும். மேலும், அரசாங்கம் தற்போதைக்கும் செய்துள்ளவாறு அவசரகால நிலைமையை தொடர்ந்தும் நடத்திச் செல்வதற்காகவும், அதன் கீழ் நாடு முழுவதும் ஜனநாயக உரிமைகள் மற்றும் மானுட சுதந்திரங்களை அடக்குவதற்கும் இதனை ஒரு சாட்டாகக் கொள்வதற்குரிய இடம் ஏற்படும்.

# பொலீஸ் மா ...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது அமுலிலுள்ள ''அவசரகால நிலைமையின் கீழ், ஜனுதிபது ஜே. ஆர் ஜயவர்தனுவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இல 28 உடனுன பிரமாணத்தின்கீழ் பிரசுரங்களை வெளியிடும் சுதந்திரத்தின்மீது பாரிய அளவிலான கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேற்படி பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை (பிரதி இணைக்கப்பட்டுள்ளது)பொதுமக்கள் மத்தியில் விநியோகிப்பதற்கும் எமது மார்ச் 5ம் திகதிய நடவடிக்கை பற்றிக் கூறும் விளம்பரங்களை (மாதிரி இணைக்கப்பட்டுள்ள) பொது இடங்களில் ஒட்டுவதற்கும் நாம் விரும்புகின்ரேம். காரணம் என்னவெனில், எம்மால் அறிவிக்கப்பட்டுள்ள மார்ச் 5ம் திகதிய நடவடிக்கைபற்றியும் அதன் நோக்கங்கள் பற்றியும் இந்நாட்டின் மிகப் பெரும் பான்மையான தொழிலாளர்களும் சாதாரண குடி மக்களும் ஆர்வம் கொண்டிருந்தாலும், ஏற்கனவே சில பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் வெளியிடப் பட்டவைகளைக் கொண்டுமட்டும் அவர்கள் இதுபற்றி அறிந்திருக்கவியலாது என நாம் கருதுவதேயாகும்.

இதன்படி மேற்கூறப்பட்ட காரணங்களையிட்டு, தமிழ். சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதற்கும் விளம்பரங்களை ஒட்டுவதற்கும் தங்களின் அனுமதியை நாம் கோருகின்ரேம்.

## சிஎம்யு நடத்திய மே ...

1ம் பக்கத் தொடர்ச்சி

கூட்டம் காலை 10.15 அளவில் ஆரம்பமாகியதுடன், சங்கத்தலைவர் ஆர் லியனகே கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர். அவர் தனது தலைமையுரையில், அரசாங்கத்தினுல் பிற்போக்குத்தனமாகச் செய்யப்பட்ட தடையையும் பொருட்படுத்தாது, சர்வதேசத் தொழிலாளர் தினத்தை நினைவு கூர்வதற்காக, போக்கு வரத்துச்சிரமங்களின் மத்தியில் கூட கூட்டத்திற்காகச் சமூகமளித்த தோழர் தோழியர்களை தோழமையுடன் வரவேற்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 10 ஆண்டு காலங்களில், தொடர்ச்சியானவாறு மேதினக் கூட்டத்தை சங்கம் நடத்தியதாகவும், 1971ம் வருடத்தில் ஆட்சியிலிருந்த அரசாங்கம் மேதினக் கூட்டத்தை தடை செய்த போது கூட மேதினம் தொடர்பாகச் சங்கம் கடைப்பிடித்து வந்த வழமையின்படி அன்று மேதினக் கூட்டத்தை நடத்திய ஒரே அமைப்பு சிஎம்யு தான் என்பதை அவர் நினைவு படுத்தினுர்

சங்கத்தின் செயலாளர்களில் ஒருவரான தோழர் எம்.எஸ். ஜயக்கொடி உரையாற்றும் போது, 1987 ஏப்ரல் 21ம் திகதி கொழும்பு புறக் கோட்டையில் நிகழ்ந்த குண்டு வெடிப்பினைக் காரணம் காட்டி, தொழி

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியா செண்ட் அன்ரூஸ் ஹோட்டல் 19 தொழிலாளர்கள் வேலை நீக்கம் . . . .

**1987 மார்ச் 5ம் திகதிய சங்கத்தின் எதிர்ப்பு நடவடிக்கையில் பங்குபற்றியதையடுத்து நுவரெலியா செண்ட் அன்ட்ரூஸ் ஹோட்டல் கிளையின் 19 உறுப்பினர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.**

1987 மார்ச் 5ம் திகதிய பொது வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டதன் பின் அத்தினத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு மீண்டும் வேலைக்குச் சமூகமளித்தபோது, இரு பொலீஸ் உத்தியோகத்தர்களின் உதவியுடன், மேற்படி ஓட்டல் நிர்வாகிகள், ஊழியர்களுக்கு, நுழைவாயிலிலேயே வேலை நீக்கக் கடிதங்களை விநியோகித்தனர்.

பொதுச்சபையின் தீர்மானத்தின்படி இப்பத்தொன்பது பேருக்கும் உதவியாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மாத சம்பளம் தற்போதைக்கும் வழங்கப்பட்டுள்து. நிர்வாகத்தினரின் இத்தான்தோன்றித்தனமானதும் நியாயமற்றதுமான நடவடிக்கை சம்பந்தமாக தொழிற்திணைக்களத்தில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையில் நிர்வாகம் கலந்து கொள்ளவில்லை.

நியாயமற்றவாறு வேலை நீக்கம் செய்யப்பட்ட இவ் வூழியர்களை உடன் வேலையிற் சேர்க்குமாறு, சங்கம் இணைந்துள்ள சர்வதேச உணவு மற்றும் அதனோடிணைந்த தொழிலாளர்களின் சங்கம் (ஐயுஎப்) கடிதமொன்றை நிர்வாகத்திற்கு அனுப்பியுள்ளது.

இந்நியாயமற்ற வேலைநீக்கம் தொடர்பாக சங்கம் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மார்ச் 5ம் திகதிய வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் அச்சுறுத்திய போதிலும், அதனையும் பொருட்படுத்தாது வேலை நிறுத்தத்தில் பங்கு கொண்ட மேற்படி அங்கத்தவர்கள் பாராட்டுதலுக்குரியவர்களாவர்.

## ஆபத்துமிக்க சூழ்நிலையிலும் . . .

(6ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சிஎம்யுவில் சேர்வதற்குரிய மற்றுமொரு காரணம் என்னவெனில், மேற்படி நடவடிக்கைக்காக சங்கத்தினுல் முன்வைக்கப்பட்ட ஏழு காரணங்களையும் அவர்கள் ஏற்றுக் கொண்டவர் என்பதாகும்.

இலங்கையில் நீதிக்கும் சமாதானத்திற்கும், மானுட, ஜனநாயக உரிமைகளுக்காகவும், தொழிலாளர் வர்க்கத்தினதும், வெகுஜனங்களினதும் உரிமைக்காகவும் போராடுவதற்குத் தாம் சார்ந்திருந்த தொழில் சங்கங்கள் தயாராக இல்லை என்பதும் இதற்கான மற்றுமொரு காரணமாகும்

இத்தகைய அச்சுறுத்தலும், ஆபத்துமிக்கதுமான தொரு நிலைமையின் கீழ் சங்கத்தின் பொதுவான நடவடிக்கையில் கலந்து கொண்டதன் மூலம் மேற்படி இருகிளைகளும் காட்டியுள்ள வீரமிகு உதாரணத்தையிட்டு, 1987 மார்ச் 26ம் திகதிய சங்கத்தின் பொதுச் சபை தனது மிகுந்த பாராட்டுதல்களைத் தெரிவித்து ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ் குடாநாட்டு நுழைவாயிலில் ஆனையிறவில் அமைந்துள்ள தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் சிஎம்யு கிளையின் அங்கத்தவர்கள் மேற்படிதினத்தில் கருப்புப்பட்டியணிந்து கடமையாற்றியதுடன் பிற்பகல் 2 மணியிலிருந்து கூட்டம் ஒன்றையும் நடத்தி சங்கத்தின் எதிர்ப்பு தினத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கில் இன்று நிலவும் பயங்கர நிலைமையை அலட்சியம் செய்து இத்தினத்தில் இவர்கள் இத்தகைய நடவடிக்கையொன்றில் ஈடுபட்டதையிட்டுத் தனது பாராட்டுதல்களைத் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றையும் 26/3/87 கூடிய பொதுச் சபை நிறைவேற்றியது.

## ஐ. யு. எப் நிறைவேற்றுச் சபை ...

(3ம் பக்கம் தொடர்ச்சி)

மேற்படி தினத்தில் சிஎம்யு அமைப்பின் பகிரங்க ஊர்வலத்தை தடைசெய்தமையையும் இச்சபை கண்டனம் செய்கின்றது.

1987 மார்ச் 5ம் திகதி இலங்கை முழுவதும் சிஎம்யு அமைப்பினுல் மேற்கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தத்திற்கு கலந்து கொண்ட காரணத்தினுல் நுவரெலியா செண்ட் அன்டுரூஸ் ஹோட்டலின் சிஎம்யு அங்கத்தவர்கள் 19 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டதை கண்டனம் செய்யும் இச்சபை, அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்துமாறு கோருகின்றது.

இலங்கையில் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மொழி பேசுகின்ற மக்களை பெருமளவில் மரணத்திற்குள்ளாக்கி மற்றும் அவர்களுக்குப் பாரதூரமானவாறு இடைஞ்சல்களை ஏற்படுத்தி, இராணுவத் தாக்குதல்களையும் பொருளாகாரத் தடைகளை தொடர்ந்தும் நடத்திச் செல்லாது, அப்பிரதேசங்களிரண்டிலும் நடைபெறும் மோதல்களை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதன் மூலம் இலங்கையில் மீண்டும் அமைதியை ஏற்படுத்துமாறும் அவசரகால நிலைமையை முடிவுறுத்துமாறும் இச்சபை கோருகின்றது.

### பிரேஸில் தொழிலாளர் போராட்டம்

பிரேஸில் கப்பற் தொழிலாளர்கள் சப்பளவுயர்வு கோரி 35 நாட்களாக போராட்டம் நடத்தியதன் பின் 120% சம்பளவுயர்வு பெற்ற நிலையில் போராட்டத்தை முடிவுறுத்தினர்.

சர்வதேச போக்குவரத்துத் தொழிலாளர் சம்மேளனத்தில் இணைப்பையுடைய தொழில்சங்கமொன்றினுல் இப்போராட்டம் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.



மார்ச் 5 நடவடிக்கைகளில் கலந்து கொண்ட சிஎம்யு பெண் உறுப்பினர்களில் ஒரு பகுதியினர்

## சிஎம்யு நடத்திய மேதினக் கூட்டம்

7ம் பக்கம் தொடர்ச்சி

லார்களின் பாதுகாப்பிற்காக ஒன்று கூடி, மேதினக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும், தடை செய்துள்ளனர் எனினும், இது அரசாங்கத்தின் பாதுகாப்புக்காக வேயன்றி வேறல்ல என்பதை விளக்கிக்கூறினுர்

சிஎம்யு பொதுச் செயலாளர், தோழர் பாலாதம்பு உரை நிகழ்த்தும்போது, மேதினத்தைச் சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடுவதற்குக் காரணமாயமைந்த 19ம் நூற்ருண்டின் பிற்பகுதியில் சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் மேற்கொண்ட கிளர்ச்சி பற்றியும் அன்று அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கொடூரமான சுரண்டலுக்கெதிராக தொழிலாளர் வர்க்கத்தினுல் மேற்கொள்ளப்பட்ட கிளர்ச்சியின் போது பல தலைவர்கள் தமது உயிர்களையும் தியாகம் செய்தனர் எனக் கூறிய தோழர் பாலாதம்பு இந்நாட்டிலும் முதலாளித்துவ ஆட்சிமுறையை வீழ்த்துவதற்காகத் தொழிலாளர் வர்க்கம் போராடவேண்டும் எனவும் குறப்பிட்டார்.

இலங்கையில் தொழிற்சங்க அமைப்புக்களால் மேதினம் நடத்தப்பட்டு வரும் வரலாறுபற்றி விளக்கிக் கூறிய அவர், இலங்கையில் முதலாளித்துவத்திற் கெதிராகப் போராடுவதற்காகச் சரியான தலைமையின்கீழ் அணிதிரளவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினுர்

புறக்கோட்டையில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைக் கண்டித்து நிறைவேற்றுச் சபையினுல் வெளியிடப்பட்ட பிரகடனம் மற்றும் மேதினக் கூட்டம் ஊர்வலங்களைத் தடைசெய்தமைக்கு எதிராக ஜனுதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஆகியன கூட்டத்தினுல் அங்கீகரிக்கப்பட்டன.

அரசாங்கத்தின் தடை அமுலிலிருந்த போதும், சில தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புக்களும் இத்தினத்தில் மேதின கூட்டங்களை நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்

கள் நிகழ்த்தப்பட்டன. தொழிற்சங்க உரிமைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதல்கள், ஊர்வலம் மற்றும் அமைதியானவாருன மறியல் நடவடிக்கைகளைத் தடுத்தல் நாட்டு மக்களின் சிவில் உரிமைகள் மீறப்படுதல், தொழிற்சங்க இயக்கத்தைச் சீர்குலைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், தொழிலாளர் உரிமைகளைப் பறித்து, மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறுதல் ஆகிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்தும் உரைநிகழ்த்தப்பட்டன. அத்துடன் எதிர்காலத்தில் சங்கத்தினுல் தீர்மானிக்கப்படக் கூடிய அடக்குமுறைக்கெதிரான சகல நடவடிக்கைகளுக்கும் முழு ஒத்துழைப்பையும் வழங்குவதெனவும் நுவரெலியாப் பிரதேசத்தின் அங்கத்துவ எண்ணிக்கையை அதிகரித்து அவர்களை அணிதிரட்டி போதுமான விளக்கமும், திடசங்கற்பமும் கொண்டு முன்னேறிச் செல்ல வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. பொலீஸ் தலையீடோ குறிக்கீடோ கூட்டங்களுக்கு இருக்க வில்லை.

## மார்ச் 5 எதிர்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

லில் உள்ள அவசரகால நிலைமையைக் கண்டிக்கும் உரை

இலங்கை வர்த்தக, கைத்தொழில் பொது தொழிலாளர் சங்கம் (சி.எம்.யு) கொழும்பு தொன்ஹப்பிட்டி சி.எம்.யு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org